பாடம் 2

# ஏமாற்றியது யார்?

*உனக்குப் பிரியமான ஒருவருக்காக நீ அதிகநேரம் வேலைசெய்ததுண்டா? அப்பாவிற்கு உதவும்படி கடைக்குச் சென்றிருக்கிறாயா? அம்மாவிற்கு உதவும்படி வீட்டைப் பெருக்கி, சிறு சிறு வேலைகளைச் செய்ததுண்டா? அப்படிச் செய்தபோது மகிழ்ச்சியாக இருந்ததுண்டா?*

லாபானின் வீட்டிற்கு யாக்கோபு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. ஒருநாள், லாபான் தன் மருமகன் யாக்கோபை அழைத்தான்.

‘‘என் மருமகனே யாக்கோபு, நீ என்னிடம் சும்மா வேலைசெய்யக்கூடாது. உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டும்? சொல்’’ என்று கேட்டான்.

யாக்கோபுக்கு லாபானின் வீட்டிலிருப்பது மிகவும் பிடித்திருந்தது. அதிலும் ராகேலை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ராகேலை யாக்கோபு திருமணம்செய்ய விரும்பினார். மாமாவிடம் தன்னுடைய ஆசையைக் கூறினார். அந்தக் காலத்தில் ஒருவன் ஒரு பெண்ணைத் திருமணம்செய்ய விரும்பினால், அப்பெண்ணுக்கு அவன் நகைகளோ, தங்கமோ, வெள்ளியோ, சொத்துக்களோ எதையேனும் கொடுக்கவேண்டும். மாப்பிள்ளையிடமிருந்து அவற்றை வாங்கிய பின்னர்தான் பெண்ணின் தகப்பன் தன் மகளை அவனுக்குத் திருமணம்செய்து கொடுப்பான். இது அந்த ஊராரின் வழக்கம். யாக்கோபிடமிருந்து லாபான் பெற்றுக்கொள்ளும்படிக்கு இப்போது எதுவும்இல்லை. மேலும், யாக் கோபு நன்றாக வேலை செய்வதை லாபான் கவனித்தான்.

எனவே, யாக்கோபின் உழைப்பைத் தன் குடும்பத்திற்காகப் பயன்படுத்தத் திட்டமிட்டான்.



## மனன வசனம்

**அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது.**

**1கொரிந்தியர் 13:4.**

"மருமகனே! ராகேலை நான் உனக்குத் திருமணம் செய்து தர வேண்டுமானால் நீ ஏழுவருடங்கள் சம்பளம் எதுவும் இல்லாமல் என்னிடம் வேலைசெய்யவேண்டும்" என்றான். அப்படியே யாக்கோபு மிகுந்த சந்தோஷத்தோடு லாபானிடத்தில் ஏழுவருடங்கள் வேலைசெய்தார். ராகேலின் மேல் அவர் வைத்திருந்த அளவற்ற அன்பால், அந்த ஏழு வருடங்களும் வேகமாகக் கழிந்துவிட்டன. மிகவும் உண்மையாகவும், முறுமுறுப்பின்றியும் வேலைசெய்த யாக்கோபை லாபான் கடினமாக வேலைவாங்கினான்.

யாக்கோபினால் லாபானின் செல்வம் மேலும் பெருகியது. எனவே, தன்னுடைய மருமகன் யாக்கோபை ஏமாற்றித் தொடர்ந்து வேலை வாங்கத் திட்டமிட்டான். குறிப்பிட்ட நாளில் யாக்கோபுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்தான். யாக்கோபுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ராகேலும் தானும் இனி ஒன்றாக வாழப்போகிறோம் என நினைத்து யாக்கோபு மிகவும் மகிழ்ந்தார்.

அந்த நாட்டு வழக்கப்படி, திருமண நிகழ்ச்சியின்போது மணப்பெண்ணின் முகத்தில் திரைபோட்டிருப்பார்கள். எனவே, மாப்பிள்ளை கூட அப்போது மணப்பெண்ணிண் முகத்தைப் பார்க்கமுடியாது. இந்த வழக்கத்தினை லாபான் தனக்குச் சாதமாகமாக்கிக் கொண்டான்.



## செய்தி

**பிறருக்கு உண்மையோடும் பொறுமையோடும் வேலைசெய்ய தேவன் நமக்கு உதவுகிறார்.**

ராகேலின் அக்காவாகிய கூச்சமானபார்வையைஉடைய லேயாளை யாக்கோபுக்கு இரவுவேளையிலே திருமணம் செய்து வைத்துவிட்டான். தான் திருமணம் செய்தது ராகேல் அல்ல; அவள் அக்கா லேயாள் என்பதைக் காலையில்தான் அறிந்தார் யாக்கோபு. அழுகையும் கவலையும் ஏமாற்றமுமாக இருந்தார்.

லாபானிடம்சென்று வருத்தப்பட்டார். லாபான் தந்திரமாக, ‘‘மூத்தவள் இருக்கும்போது இளையவளைத் திருமணம் செய்துகொடுப்பது எங்களது வழக்கம் அல்ல. ஏழு நாள் கழித்து ராகேலை உனக்குத் திருமணம்செய்து தருகிறேன். இன்னும் நீ ஏழு வருடங்கள் ராகேலுக்காக வேலை செய்யவேண்டும்’’ என்றான். எனவே, ராகேலுக்காக யாக்கோபு மீண்டும் ஏழு வருடங்களாகச் சம்பளமின்றி கடினமான அநேக வேலைகளைச் செய்தார்.

அன்பே, நாம் நம்மிடம் வேலை பார்ப்பவர்களைக் கனிவாக நடத்தவேண்டும்.

### புதிர் 2

**செய்முறை:**

*மனன வசனத்தை நன்குபடி. பின்னர் கட்டத்தினுள் கொடுக்கப்பட்டுள்ள அதே வசனத்தில், விடுபட்டுள்ள எழுத்துகளைக் கோட்டில் எழுது.*

**அன்பு**

**____டி____ சா____த____ம்**

**த____வ____ள்____து.**